உ
கடவுள் துணை

செந்தமிழ்

தொகுதி-ருo.] ஜய-ஸூ—ஐப்பசி-மீ [பகுதி-கஉ.
Vol. 50. October–November—1954. No. 12.

உள்ளுறை

வித்துவான் திரு. K. S. விசுவநாதசாஸ்திரி அவர்கள், தமிழ்த்துறைத்தலைவர்,
S. V. O. கல்லூரி, திருப்பதி.

(84-ம் பக்கத் தொடர்ச்சி)

4. உள்ளுறைகள் அகத்தில் மட்டுமே வரவேண்டுமா?

உள் உறைந்து நிற்கும் குறிப்புக்களை உணர்த்தி நிற்பது உள்ளுறை என்பதும், அது ஐந்து என்று தொல்காப்பியத்துள் எண்ணப்பட்டிருக்கின்றது என்பதும் நாம் அறிவோம். இவ்வுள்ளுறை ஐந்தனுள்ளும் சில அகம், புறம் இரண்டிடத்தும் வருதற்குரியன என்பதும் 'உள்ளுறை' என்ற தலைப்பில் முன்பு தரப்பட்டிருக்கின்றது. தொல்காப்பிய உரைகளை நோக்குவார்க்கு இவை அகத்திற்கேதான் வரவேண்டும் என்று தோன்றிக் கொண்டே இருக்கும். அவ் வையம் அகல்வதற்கு இன்றியமையாதன சில இங்கே தரப்பெறுகின்றன.

(இவ் வுள்ளுறைகள் அகத்திற்கேதான் வரவேண்டுமென்றோ, புறத்தில் வரக்கூடாது என்றோ, தொல்காப்பியம் வெளிப்படையாக ஏதும் மொழிந்திலது.) ஆனால், உள்ளுறைகளின் பொது இயல்பாக அவை கருப்பொருளை இடமாகக் கொண்டு தோன்றும் என்பதை,

"உள்ளுறை தெய்வம் ஒழிந்ததை நிலனெனக்
கொள்ளு மென்ப குறியறிந் தோரே"

என்ற நூற்பாவினால் உணர்த்தி இருக்கின்றது. இஃதும் அகத் திணை இயலுள் உள்ளுறையுவமவியல்பு உணர்த்துகின்ற இடத்தில் உணர்த்தப்பெற்றிருக்கின்றது. உள்ளுறையுவமமோ திணை உணர்த் துதலில் தவறாது இயல்வது. அது,

"உள்ளுறை யுவமம் ஏனை யுவமமெனத்
தள்ளா தாகும் திணையுணர் வகையே"

என்பதனால் உணர்த்தப் பெறுகின்றது. இங்ஙனம் பொருளியலுள் வருகின்ற உள்ளுறைகள் ஐந்தனுள்ளும் இவ்வுள்ளுறையுவமத்தை மட்டும் தனியே பிரித்தெடுத்துக்கொண்டு அகத்திணை இயலுள் அது திணையைத் தவறாது உணர்த்திவரும் என்றும் கருப்பொருளை இடமாகக்கொண்டு இயங்கும் என்றும் கூறுவதிலிருந்து இவ் வுள்ளுறையுவமம் அகத்திற்கே சிறப்பாக உரிமை செய்யப்படு கின்றதென்பது நன்கு புலனும்.

அன்றியும், இவ்வுள்ளுறைகளை ஐந்தென்று எண்ணுகின்ற பொருளியலுள் வருவன பலவும் அகத்திற்கே உரியனவாகக் காணப்படுகின்றன. இவ் வனைத்தையும் நோக்கும்போது உள்ளு றைகள் பலவும் அகத்திற்கே உரியனவென்றுதான் தோன்றும். இத னாலேயே உரையாசிரியர்களும் இவை அகத்திற்கே உரியனவென்று கருதி உரை வகுத்திருக்கின்றனர்.

ஆயினும், உண்மைஇயல்பு ஆராய்ந்து அறியத்தக்க தாகவே காணப்படுகின்றது. குறிப்புரைகள் பலவற்றையும் வகைப்படுத்தி உள்ளுறைகளை ஐந்தென்று எண்ணியிருக்கவேண்டுமே ஒழிய, ஒரு சிலவற்றைஒழித்துச் சிலவற்றைமட்டும் ஐந்தென்று எண்ணியிருக்க இயலாது. பொருளிலக்கணம் மொழிகின்ற தொல்காப்பியம் அகம் புறம் எனப் பொருள் இருவகைப் படுத்து விரிக்கின்றபோது, உள் ளுறைகளாக வருகின்ற குறிப்புரைகளும் அகம் புறம் இரண்டு இடங் களிலும் இயல்வது உலகவியல்பாகக் காணப்படும்போது, அகத்திற் குரியவையாக வருகின்ற உள்ளுறைகளை மட்டும் எண்ணுகின்ற தென்று கொள்வது பொருத்தமுடையதன்று.

ஆனால், உள்ளுறையுவமமும் இறைச்சியும் மட்டும் அகத்திற்கே வருகின்ற நியதி உடையன என்று கொள்ளலாம். ஏனைய அந் நியதியின்றிப் பொதுமையின் இயங்கலாம். அகத்திற்கே உரியனவாகக் காணப்படுவனவற்றுள் உள்ளுறை யுவமத்தை முதலில் எடுத்துக்கொள்வோம். இது உள்ளுறை ஐந்தனுள் ஒன்றாகக் காணப்படுவது. உடனுறை உவமம் சுட்டு நகை சிறப்பு என வரும் உள்ளுறை ஐந்தனுள் இரண்டாவது உள்ளுறை இது. இதன் சிறப்பியல்புகள் அகத்திணை இயலுள்ளும் எஞ்சிய சில இயல்புகள் உவமவியலுள்ளும் மொழியப் பெறுகின்றன. இதனியல்பு முழுவதையும் ஏதேனும்ஒரு இயலுள்ளேயே உணர்த்தாமல் மூன்று இயல்களுள் மொழிந்திருக்கின்ற நூலமைப்பை நோக்கும் போது இதற்குஏதோ ஒருநியதி உண்டென்பதை அது அறிவித்துக் கொண்டிருக்கின்றது. அந் நியதியின் வடிவமாகக் காணப்படுவது உள்ளுறை உவமம், குறைபாடு இல்லாததொரு உவம வடிவின் உள்ளுறுத்தப் பெற்றிருத்தல் வேண்டும் என்பதும், தவறாது திணையை உணர்த்தி நிற்றல் வேண்டுமென்பதும், அவ்வாறு திணை யுணர்த்தற்கு இன்றியமையாத கருப்பொருளிடத் தோன்றுதல் வேண்டுமென்பதும் ஆம். இதனால் இது அகத்திற்கே வரவேண்டு மென்ற நியதி உடையதாவதும் உணரப்படும்.

இனி இறைச்சியென்ற உள்ளுறையின் இயல்பைக் காண்போம். உள்ளுறை ஐந்தனுள் முதலது உடனுறை என்று காணப்படுகின்றது. இவ்வுடனுறையே இறைச்சி என்று உரைகாரர்கள் கருதுகின்றனர். இஃதும் அகத்திற்கே உரியதாகக் காணப்படுகின்றது. வருந்தியவிடத்து வற்புறுத்தல் வேண்டி அன்புறு தகுவன சுட்டுதல் முதலியன இவ் விறைச்சியின் சிறப்பியல்பு ஆதலின், இஃதும் கொடுமை முதலியன சுட்டுவதாய்க் கருப்பொருளிடம் தோன்றுவதிற் பிறழ்ச்சி இன்றி அகத்திற்கே வரும் உரிமை உடையதென்பது ஒருவாறு உணரப்பெறுகின்றது.

இவ்வாறாக உள்ளுறையுவமத்திற்கும் இறைச்சிக்கும் ஒருவாறு சிறப்பியல்பு விளக்கப்பெற்றிருப்பதைத் தொல்காப்பியத்துட் காண்கின்றோம். ஆனால் சுட்டு நகை சிறப்பென்ற ஏனைய உள்ளுறைகளின் சிறப்பியல்புகள் எங்கே விரித்தோதப் பெறுகின்றன என்பது புலப்படவில்லை. உள்ளுறைகளை ஐந்தென்று எண்ணியிருக்கின்ற தொல்காப்பியர் இரண்டிற்குமட்டுமே விளக்கம் தந்து ஏனையவற்றை வாளாதே விடுத்துச் செல்வாரா? இவ்வாறு சென்றாரென்றால் அது குன்றக்கூறல் என்ற குற்றமாகவன்றோ கருதப்படும்? தொல்காப்பிய உரைகள் இந் நோக்கொடு இவ் வுள்ளுறைகளை விளக்குவதாகக் காணப்படவில்லை.

இத்தகையதொரு குற்றம் தொல்காப்பியத்திற்கு ஏற்படாதவாறு பொருள்காணும் முறையிலேயே சுட்டு முதலிய மூன்று உள்ளுறைகளும் விளக்கம் வேண்டுமிடத்து, பொருளியல் முதலிய மூன்று இயல்களையும் நோக்கி நிற்பனஎன்பது இவ் வுள்ளுறை என்ற தலைப்பில் முன்பு விளக்கப்பெற்றது.

ஆகவே உள்ளுறைந்து வருகின்ற பொதுவியல்பு உள்ளுறை ஐந்திற்கும் ஒப்பதேயாயினும், உள்ளுறையுவமமும் இறைச்சியும் ஒரு நியதிக்கு உட்பட்டு வருவன என்பதும், ஏனைய மூன்றும் அந் நியதிஇன்றி ஏற்றபெற்றி இயலும் என்பதுந் தெளிவாம். கருப்பொருளிடமாகப் பிறத்தல் உள்ளுறை எல்லாவற்றிற்கும் பொதுவியல்பாகக் கூறப்பெற்றிருக்கின்றதானாலும், அதனை அகத்திணை இயலுள் உள்ளுறையுவமவியல்பு உணர்த்துமிடத்திற் கூறுகின்றமையின், உள்ளுறையுவமத்திற்கே அது இன்றியமையாச் சிறப்புடையதென்பது கூறாமலே அமையும். உள்ளுறையுவமத்திற்குத் திணையுணர்த்துதலை வற்புறுத்துகின்றமையும் இறைச்சிக்கு வருந்தியவிடத்து வற்புறுத்துங்கால் அன்புறுதகுந சுட்டுதலும் இயல்பாகக் கூறுகின்றமையும் நோக்க, இறைச்சியும் அவ் வுள்ளுறையுவமம் போலவே ஒரு நியதிக்குட்பட்டதென்பதும், அகத்திற்கே உரிமை பூண்டதென்பதும் புலப்படும். ஏனையவற்றிற்கு இங்ஙனம் சிறப்பியல்

பாகத் தனியே யாதும் மொழியாமல் விளக்கத்தை வேறு இடங்களில் உய்த்துணர வைத்து, உள்ளுறை என்ற அளவில் அவற்றை விடுத்துச் செல்வதிலிருந்து அந்நியதி இன்றியும் ஏற்றபெற்றி அகம் புறம் இரண்டிடத்தும் அவை வரலாமென்பதும் பெறப்படும்.

அன்றியும், நகையின் விளக்கமாகக் கொள்ளத் தகுந்த மெய்ப்பாட்டியல் அகம் புறம் இரண்டிற்கும் பொதுவாய மெய்ப்பாடுகளையே முதலில் விரித்துரைப்பதாலும், மெய்ப்பாட்டுப் பொருளெனச் சிலவற்றை வேறுகூறிச் செல்வதாலும், பிறக்கின்ற இடமும் வேறுபடுக்கப்பட்டுப் பொதுமையின் இயங்கு மியல்பையும் மெய்ப்பாட்டிற்கு விதித்துச் செல்கின்றது. இதிலிருந்து இதனை அடுத்து வரும் சிறப்பும் இதனைச் சார்ந்து வருகின்ற சுட்டுங் கூட இவ்வியல்புடைய வென்றே உய்த்துணரலாம்.

எனவே உள்ளுறைகளுட் சில அகத்திற்கு மட்டுமே வருதற்குரியன என்று கொள்ள வேண்டுமானால், உள்ளுறையுவமமும் இறைச்சியுமே அத்தகைய நியதிக்கு உட்பட்டு வருவனவென்பதும், ஏனைய மூன்றும் அத்தகைய நியதி இன்றி ஏற்றபெற்றி வருவன என்பதும் முடிவாம். ஆயின் சுட்டின் விளக்கம் வேண்டுமானால் பொருளியல் நோக்கி அறிதல் வேண்டும் என்று கொண்டோம். பொருளியலுள் வருவன பலவும் அகத்திற்கு உரியனவாகவே காணப்படுகின்றன. இங்ஙனமிருக்கவும் சுட்டு இந்நியதி இன்றி இயல்வதென்று கொள்வது எங்ஙனம்? இதற்கு விடை வேண்டுமானால் சுட்டு நகை சிறப்பு என்ற இம்மூன்றனுள் இடையில் நிற்பதாய நகையின் இயல்பை நன்கு தெளிவுபடுத்திக் கொள்ளுதல் வேண்டும்.

இந்த நகை என்னும் உள்ளுறையின் இயல்பை விளக்குகின்ற உரைகாரர்கள், "நகையாவது, நகையினால் பிறிதொரு பொருளுணர நிற்றல்" என்றும், "நகைபாடி ஒன்று நினைந்து ஒன்று கூறுவது" என்றும் விளக்கம் தந்திருக்கின்றனர். இதற்கிணங்க நாம் காணக் கூடிய முடிபு, நகையைக் கொண்டு வேறொன்று புலப்படுமாறு

செய்தலென்று ஏற்படும். படவே, நகையினால் ஒன்று உணர நிற்பது, நகை என்ற உள்ளுறை என்றால், வெருளியில் ஒன்று உணர நிற்பது வெருளி என்பதொரு உள்ளுறையுமாகலாம். இவ்விதமே அழுகை முதலிய ஒவ்வொன்றிற்கும் ஒவ்வோருள்ளுறையாக உள்ளுறைகள் எண்ணிறந்தனவும் ஆகலாம். இங்ஙனம் உள்ளுறைகள் எண்ணிறந்தனவாக விரிந்து சென்றுகொண்டிருக்கும். ஆதலின் நகை என்ற உள்ளுறையின் இயல்பாக இவ்வாறு விளக்கம் காண்பது பொருந்துவதன்று என்று தோன்றுகின்றது.

இந்த நகை என்ற உள்ளுறைக்கு விளக்கங்காண்பதற்கு முன் நகை என்ற இப்பெயரைத் தொல்காப்பியர் எந்த இடத்தில் எந்தப் பொருளில் வழங்கி இருக்கின்றனர் என்று முதலிற் காண்பது இன்றியமையாத தாகின்றது. மெய்ப்பாட்டியலுள் எண்வகை மெய்ப்பாடுகளை எண்ணுகின்ற விடத்து இதனை முதலில் நிறுத்தி "நகையே அழுகை" என மெய்ப்பாடுகளை எண்ணியிருக்கின்றனர் தொல்காப்பியர். மெய்ப்பாடும் அதன் உண்மை இயல்பு காணுமிடத்து உள்ளுறைத் தன்மை வாய்ந்ததே. அந்தந்த மெய்ப்பாட்டிற்கும் உரிய பொருளமைப்பின் வாயிலாகவே அந்தந்த மெய்ப்பாடும் புலனாவதாம். அங்ஙனம் புலனாகின்ற அம்மெய்ப்பாடு உணரப் பெறுவதாய குறிப்புப் பொருளேயாம். அதனை உணர்த்துகின்ற மெய்ப்பாட்டுப் பொருள் வெளிப்படையாக மொழியப்பெறுவதாகும். அதனால் உணரப் பெறுகின்ற அம்மெய்ப்பாடு உள்ளுறைந்து நிற்பதாகும். ஆதலின் மெய்ப்பாடும் உள்ளுறைக் குறிப்பு வகையுள் ஒன்றேயாகின்றது. இது உள்ளுறைக் குறிப் பாவதனாலேயே, கண்ணினுஞ் செவியினும் நுண்ணிதின் உணரும் நங்கயப் பொருளென்று இது பாராட்டப் பெறுகின்றது.

இத்தகைய இயல்பு வாய்ந்தது மெய்ப்பாடு என்றால், மெய்ப்பாடுகள் அனைத்தையுமே அடக்கிக் கொள்வதாய உள்ளுறையே உள்ளுறை வகைகளுள் ஒன்றாதல் வேண்டும். அத்தகைய இயல்புடையதாகவே ஐவகை உள்ளுறைகளுள் நகை என்பதும், வகுக்கப்

பெற்றிருத்தல் வேண்டும். மெய்ப்பாடுகளனைத்தையும் உள்ளுறைக் குறிப்பாகப் பெற்று வருகின்ற இவ்வுள்ளுறைக்கு நகை என்று பெயரிட்டிருப்பதும் முதற்குறிப்பு வகையாலிட்டு வழங்கிய பெயராகும். இந் நகை என்ற பெயரும் முதற்குறிப்பாக நின்று மெய்ப்பாடுகள் பலவற்றையும் எஞ்சாது உணர்த்துவதாகின்றது. இவ் வுள்ளுறையை இவ் வியல்புடையதாகக் கொள்ளாவிடின், உள்ளுறைந்து வருதலையே இயல்பாகக் கொண்ட மெய்ப்பாடுகள் பலவும் உள்ளுறை என்று அடக்கப் படாமல் விடுபட்டு நிற்கும். இவ் வனைத்தையும் எஞ்சாது அடக்கிக் கொண்டு அவற்றை உணர்த்துவதாக ஒரு உள்ளுறை அமைய வேண்டுமென்றால், இவ்விதம் இதற்கு விளக்கம் காண்பதே சாலப் பொருந்துவதாகும். இந் நிலையில் தான் இது ஒரு பரந்த இனத்தைத் தன்னுள் அடக்கிக் கொள்வதாகி, உள்ளுறை வகைகளுள் இஃதும் ஒன்றாக அமைவதும் பொருந்தும்.

இவ்வாறே உள்ளுறைந்து வருகின்ற குறிப்புக்கள் பலவற்றையும் ஒருங்கே நிறுத்திப் பாகுபாடு செய்யப் புகுந்தால், அவை யாவும் பொருட் குறிப்பென்றும் மெய்ப்பாட்டுக் குறிப்பென்றும் அணிக்குறிப்பென்றும் மூன்று வகைப்பட்டு நிற்குமென்றும், இவ் வகையிற் பகுப்பதே குறைந்த அளவில் எஞ்சாது அடக்கி நிற்கும் பாகுபாடாமென்றும், முன்பு இவ் 'உள்ளுறை' என்ற தலைப்பிற் கண்டோம். இவற்றுள் பொருட் குறிப்பு, பொருள் என்றும் வழங்கப் பெறும். அஃதே உள்ளுறைந்துநின்று சுட்டப்பெறுவதாகின்ற நிலையிற் சுட்டென்ற உள்ளுறையாகவுங் கொள்ளப்பெறும். மெய்ப்பாட்டுக் குறிப்பு (நகை முதலியன) உள்ளுறைந்து வருகின்ற விடத்து, அது நகை என்ற உள்ளுறையாகக் கொள்ளப் பெறுகின்றது. உவமையும் உவம வேறுபாடுமாகிய அணிக்குறிப்பு உள்ளுறைந்து வருகின்ற விடத்து, அது சிறப்பு என்னும் உள்ளுறையாகக் கருதப் பெறுகின்றது.

ஆகவே நகை என்னும் உள்ளுறையுள் உணரப் பெறுவனவாக நிற்கின்ற குறிப்புக்கள் பலவும் நகை முதலாய மெய்ப்பாடுகளாம்.

அவை யாவும் அகத்திற்கே உரியன என்பதும் இயலாது. நகை முதலாய மெய்ப்பாடுகள் அகம் புறம் இரண்டற்கும் உரியன வென்று உரைகாரர்களும் உடன்படுவர். அவற்றிற்கே உரிய மெய்ப்பாடுகள் சிலவற்றைத் தனியே ஓதியுமிருக்கின்றது தொல்காப்பியம். ஆதலின் முதற்கண் வருவனவாய நகை முதலிய மெய்ப்பாடுகள், அகத்திற்கும் புறத்திற்கும் பொதுவாகி ஏற்றபெற்றி வருதற்குரியனவாகின்றன.

[1] "ஒருகை யுடைய நெறிவலோ யானு
மிருகை சுமந்துவாழ் வேன்"

என்பது வீரம் பற்றி இளிவரல் பிறந்தது" என்பர் பேராசிரியர். அன்றியும்,

[2] "மெழுகு மாப்பிசைண் கலுழ்நீ ரானே" (புறம். 249)

என்புழிக் கணவனை இழந்தாள் அவற்குப் பலிக்கொடை கொடுத்தற்கு மெழுகுகின்றாளை, கண்ணீரே நீராக மெழுகுகின்றாளென்றமையின் இது தன்கட் டோன்றிய இழவுபற்றிப் பிறந்த அவலச் சுவையாயிற்று என்றும்,

[3] "ஐயோ வெனின்யான் புலியஞ் சுவலே" (புறம். 255)

என்பதும் அது' என்றும் இவ் வுரைகாரர் புறத்திற்குரிய பல எடுத்துக் காட்டுக்களையும் தந்து விளக்கிச் செல்கின்றமை காண்க.

இம் மெய்ப்பாடுகளனைத்தும் அடங்கும் வகையில் வகுக்கப்பெற்றுள்ளதே நகை என்ற உள்ளுறைஎன்பதும், இங்ஙனம் கொள்ளாக்கால் வெகுளி முதலியன உள்ளுறையாகாமல் வெளிப்படையாகவே வருமென்று கருத நேரிடுமென்பதும், அவ்வாறு கருதுவது மெய்ப்பாடுகளின் இயல்பிற்கு முரணுகு மென்பதும், நகை என்பது முதற்குறிப்பாக நின்று உள்ளுறைந்துவரும் மெய்ப்பாடுகள் பலவற்றையும் அடங்க உணர்த்துவதாகு மென்பதும், மெய்ப்பாடென்றே பெயரிட்டு வழங்காமல் நகைஎன்று பெயரிட்டு வழங்கி

---

[1] தொல். மெய்ப் 6. பேரா. உரை.
[2] ,, ,, 5. ,, ,,
[3] ,, ,, ,, ,, ,,

இருப்பது வெகுளி, பெருமிதம், என்று அந்தந்தச் சிறப்புப் பெயரால் இந்த இனத்து உள்ளுறை வழங்கப்பட வேண்டும் என்பதற்காகவே என்பதும், இந்த உள்ளுறைக் குரியதாக நகை ஒன்றுமே கொள்ளுவதாயின் உள்ளுறை வகை வரம்பின்றிப் பல்கிச் செல்லுமென்பதும் இதனுற் புலனும். இதன்மேல் 'நகையாடி ஒன்று நினைந்து ஒன்று கூறுவது' என்றோ, அல்லது 'நகையினுற் பிறிதொரு பொருளுணர நிற்றல்' என்றோ கொள்வது சாலாது என்பதும் நன்கு விளங்கும்.

இனி, சிறப்பென்ற உள்ளுறையின் இயல்பையும் யாதென்று காண்போம். உள்ளுறைகளுட் சிறப்பியல்பு கூறப்பெருது உய்த்துணருமாறு வாளாவிடுத்துச் சென்றிருப்பவைகளாகக் கருதப் பெறுகின்ற மூன்றனுள் இதுவும் ஒன்று. இதன் இயல்பு இத் தன்மையதென்று விளங்கக் கூறுது உள்ளுறையுள் ஒருவகையாகவோ அல்லது ஒரு தனி உள்ளுறையாகவோ வகுத்து நிறுத்தப் பெற்றதென்றும், அதற்குச் சிறப்பு என்று பெயரும் இட்டு வழங்குகின்றது தொல்காப்பியம் என்றும் கொள்வது, தொல்காப்பியத்திற்கு எத்துணை இழுக்கு விளைவிக்கும் என்று முதலிற் சிந்தித்துப் பார்த்தல் வேண்டும். இதற்குமேல் இச் சிறப்பு என்ற சொல்லையேனும் தொல்காப்பியர் வேறே எந்த இடத்திலாவது வழங்கி இருக்கின்றனரா? அப்படி வழங்கி இருந்தால் எந்த இடத்தில் எந்தக் கருத்தில் வழங்குகின்றனர் என்றுந் துருவி ஆராய்தல் வேண்டும். இங்ஙனம் ஆராயும்போது உவமவியலுள் சிறப்பு என்ற சொல் வழங்கப் பெற்றிருக்கின்றமை காணப்படும். அவ்விடத்தில் சிறப்பென்பது உவமை தோன்றும் நிலைக்களங்களுள் ஒன்ருக வருகின்றமை முதலிற் காணப்பெறும். சிறிது மேற்செல்வோமானல் உவமப்போலி என்று சில கூறத்தொடங்குமிடத்து "தவலருஞ் சிறப்பின் அத் தன்மை நாடின்" என்று அவற்றின் இயல்பைச் சிறப்பித்து அவை குற்றமற்ற சிறப்பினையுடைய தென்ற கருத்துடன் அவை பாராட்டப் பெற்றிருக்கின்றன. இதை மனத்திற்கொண்டு காண்போமானல் சிறப்பென்ற உள்ளுறைக் குரியவை எவை என்பதும், அவற்றிற்கு அப்பெயர் எக்காரணத்தா லமைந்தது என்பதும் ஒருவாறு விளங்கும்.

இதற்கு உரைசெய்கின்ற இளம்பூரணரோ "சிறப்பு என்பது இதற்குச் சிறந்தது இதுவெனக் கூறுவதனானே பிறிதோர் பொருள் கொள்ளக் கிடப்பது" என்கின்றனர். 'ஏனையுவமத்தைத் தருகின்ற கருப்பொருட்குச் சிறப்புக் கொடுத்தல்,' என்பர் நச்சினார்க்கினியர். இவ் வுரைகள் நூற்போக்கிற்கு ஒப்பதாகக் காணப்படவில்லை. சிறப்பு என்ற பெயருடன் ஒரு உள்ளுறை வகுக்கப் பட்டிருக்கிறதென்றால், சிறப்பு என்று வழங்குதற்குரிய தொன்று உள்ளுறைந்து நிற்றல் வேண்டும். அல்லது சிறப்பு என்று வழங்குதற்குரிய ஒன்றினிட மாக ஒன்று உள்ளுறைந்து நிற்றல் வேண்டும். இவ்விரண்டு இயல்பு களுள் முதலதே இங்கே பொருந்துவதாகின்றது. உவமம் உள்ளு றைந்து நிற்றல்பற்றி உள்ளுறைகளுள் ஒன்று உவமமெனப்பட்டது. மெய்ப்பாடுகள் உள்ளுறைந்து நிற்றல்பற்றி நகை என்று முதற் குறிப்பால் ஒன்று வழங்கப்பெற்றது. இவ்வாறே சிறப்பு என்று வழங்குதற்குரிய தொன்று உள்ளுறைந்து நிற்றல்பற்றி இந்த உள் ளுறையும் சிறப்பென்று வழங்கப் பெறுவதாகின்றது.

இனி இவ்வாறு சிறப்பு என்று வழங்குதற்குரியது யாதென் றறிதல் இன்றியமையாததாகின்றது. உவம வியலுள் உவமப் போலி கூறத்தொடங்கும் போது தவலருஞ் சிறப்பினை யுடைய தென்று அவற்றைப் பாராட்டிப் பேசியிருப்பதிலிருந்து உய்த் துணரக் கிடப்பதொன்று உண்டு. உவமப் போலி எனப்படுவன உவம வடிவிற் குறையுடையனவாகவே காணப்படுகின்றன. அங்ஙு னம் அவை வெளித் தோற்றத்திற் குறையுடையனவாகக் காணப் பட்ட போதிலும், தன்மையாற் குற்றமற்ற சிறப்பினை உடையன வாம். இக் கருத்தை உட்கொண்டே தொல்காப்பியர், 'தவலருஞ் சிறப்பின் அத்தன்மை' என்று பாராட்டிக் கூறுவாராயினர், இத னால் உவமமோ அல்லது உவம வேறுபாடோ உள்ளுறைந்து நிற்கும் நிலையில் அணிக் குறிப்பாயமைகின்ற அவை யாவும் சிறப்பு என்று வழங்குதற்குரியனவாம் என்று ஏற்படும். படவே, உவமமும்

உவம வேறுபாடுகளுமாய அணிக்குறிப்புக்கள் பலவும் ஒரு இனமாக அமைந்து நிற்க, அந்த இனத்தை உள்ளுறைக் குறிப்பாகக் கொண்டுவரும் ஒரு உள்ளுறைப் பகுதி, சிறப்பென்ற பெயரால் வழங்கப் பெறுவதாயிற்று என்பதும் புலனும். இவ்விதம் கொள்ளும் போதுதான், இவ் வுள்ளுறையும் குறிப்பு வகைகளுள் ஒரு இனமாக அமைகின்ற ஒரு பெரும்பகுதியை அடக்கி நிற்பதாகும். ஆகவே அணிக்குறிப்பு உள்ளுறைந்து நிற்க, அதனை உணர்த்துதற்குரியதாக இயல்வது சிறப்பென்ற உள்ளுறை என்பதாயிற்று.

ஆகவே உவமமும் உவமவேறுபாடுகளுமாய அணிக்குறிப்புக்கள் பலவற்றையும் உள்ளுறையாகக்கொண்டு இயல்வது சிறப்பென்றால், இஃதும் அகம்புறம் இரண்டிற்கும் வேறுபாடின்றி ஏற்ற ஏற்ற இடந்தோறும் வருவதே. ஆனாலும் உள்ளுறை உவமமென்று ஒரு நியதிக்குட்பட்டு வருவதொன்று தனியே பிரித்தோதப் பெற்றிருக்கின்றமையின், அதற்குரிய இடத்தை மாத்திரம் விட்டுவிட்டு ஏனைய இடங்களில் வருவன பலவும் இவ்வுள்ளுறையாகக் கொள்ளப்படும். இவ்விரண்டிற்குமுள்ள வேறுபாடும் இவ் 'உள்ளுறை' என்ற தலைப்பில் முன்னர் விளக்கப்பெற்றது.

1 "ஒன்றே னல்லேன் ஒன்றுவென் குன்றத்துப்
பொருகளிறு மிதித்த நெரிதாள் வேங்கை
குறவர் மகளிர் கூந்தற் பெய்ம்மார்
நின்றுகொய மலரு நாடனொ
டொன்றேன் றோழிமற் றொன்றி னானே"

என வருங் குறுந்தொகையுள்ளும் உவமமொன்று உள்ளுறைந்து நிற்கின்றது.

2 "அறுமருப் பெழிற்கலை புலிப்பாற் பட்டெனச்
சிறுமறி தழீஇய தெறிநடை மாப்பிணை
பூளை நீடிய வெருவரு பறந்தலை
வேளை வெண்பூக் கறிக்கும்
ஆளி லத்த மாகிய காடே"

எனவரும் புறநானூற்றினுள்ளும் உவமமொன்று உள்ளுறைந்து நிற்கின்றது. முன்னதனுள் 'பொருகளிறு மிதித்த நெரிதாள் வேங்கை, குறவர்மகளிர் கூந்தலில் அணிதற்குக் கீழ்நின்றே கொய்யுமாறு தாழ்ந்து மலர்ந்து அவரால் அலைப்புண்பதுபோல, அத்தலைவனது பிரிவினால் வாடிய அத்தலைவியும் வேற்றவர் வரைய வருதற்கு எளியளாகிய அவ் வேற்றுவரைவு குறித்து அலமலக்குறுகின்றாள்'; என்ற விதமாக உவமம் உள்ளுறைந்து நின்று புலப்படுகின்றது. பின்னதனுள்ளும் "ஆண்மான் புலியாற் கொல்லப்பட சிறுமறிகள் தழுவிய பெண்மான் அவைகட்காகப் பறந்தலை இடத்து வேளை வெண்பூக்கறித்து உயிர் தாங்கி நிற்பது போல, நெடுஞ்செழியன் பாற் பகைவர்பட அவர் தம் பெண்டிர் தம் இளம் புதல்வர்களை ஓம்புதல்வேண்டி இறந்து படாமல் அடங்கு தின்று உயிர் வாழ்கின்றனர்" என்ற விதமாக உவமம் ஒன்று உள்ளுறைந்து நின்று புலப்படுவதாகின்றது. ஆனால் முன்னதை உள்ளுறை உவமமென்று கொள்கின்றோம். பின்னதை அவ்வாறு கொள்வதில்லை; என்? இரண்டிடத்தும் கருப்பொருளிடமே இவ் வுவமங்கள் தோன்றுகின்றன எனலாம். ஆயினும் முன்னது அகத்தில் வருவது, பின்னது புறத்தில் வருவது என்போமாயின்,

> 3 "எரிருக்குங் கைதையெலாஞ் சோறிருக்க
> நீரிருக்கு மிடங்க டோறும்
> வேரிமலர்த் தேனிருக்க விவர்கூழை
> விரும்பி வந்தேன் விழுகின்றீரே"

என்றிவ்வாறு வருவதனுள்ளும் உவமம் ஒன்று உள்ளுறைந்து நிற்கின்றது. சோறும் நீரும் தேனுங் கூடத் தம்மிடம் இருக்கும்போது பிறர் கூழை விரும்பிப்போய் விழுதல் எத்துணை முறைதவறிய செயலாகுமோ, அத்துணை முறைதவறிய செயலாம் அவ் வண்டுகளின் செயல். இங்ஙனம் உவமமொன்று இதனுள்ளும் உள்ளுறைந்து நிற்கின்றது. இது அகத்தில் வருவதேயாயினும் இஃதும் உள்ளுறை யுவமமென்று கொள்ளப் பெறுவதில்லை. எதனால்? இது

கருப்பொருளிடமாகப் பிறந்ததென்று கூற இயலாது. சிலேடையிடமாகத் தோன்றுகின்றமையின் இதுவும் உள்ளுறை யுவமத்தின் வேறுபட்டதாம். உவமம் உள்ளுறைந்து வருதலும் வேண்டும். அது கருப்பொருளை இடமாகக் கொண்டு தோன்றி அகத்திற்குரியதாதலும் வேண்டும். இந்த நியதிக்குட்பட்டு வருவன உள்ளுறை யுவமமென்று கொள்ளப் பெறும். இதற்குப் புறம்பாவன வேறாம். இந் நியதிக்குட்பட்டு வருவதாதலின், "ஒன்றேனல்லேன்" என வருவது உள்ளுறை யுவமமென்று கொள்ளப்பெறுகின்றது. ஏனைய இந் நியதியின்றி ஏற்றபெற்றி வருவனவாகி இதனின்றும் வேறுபட்டனவாயின. இவற்றைக் குறிப்புப்பொருள் உணர்த்துவனவல்ல என்றோ, உள்ளுறைத் தன்மை இல்லாதன என்றோ கூறுவது மட்டும் இயலாது.

> "குருந்தம் ஒசித்தஞான் றுண்டா லதனைக்
> கரந்த படிஎமக்குக் காட்டாய்—மரம்பெறாஅ
> போர்விற் குருகுறங்கும் பூம்புன லீர்நாட!
> மார்பிற் கிடந்த மறு"

என்பதனுள் உருவகம் ஒன்று உள்ளுறைந்து நிற்பதாக உணரப் பெறுகின்றது. சோழன் ஒருவனை நோக்கி, 'நீ குருந்தம் ஒசித்த போது மார்பில் மறுவுண்டு; அதனை இப்பொழுது மறைத்துக் கொண்டிருக்கிறாய்; அதனை நீ மறைத்துக் கொண்டிருக்கும் விதத்தை எமக்குக் காட்டுவாய்' என்னும் பொழுதே அச் சோழனைக் கண்ணபிரானாக அப் புலவன் உருவகப்படுத்திக் கூறுகின்றானென்பது தெள்ளிதிற் புலனாம். இவ்வாறே,

> "இடுக்கண்கால் கொன்றிட வீழு மடுத்தூன்று
> நல்லா ளிலாத குடி"

என்பதனுள்ளும் உருவகம் ஒன்று காணப்படுகின்றது. இதனைக் குறிப்புருவகம் என்றார் பரிமேலழகரும். இவ்வுருவகமும் சிலேடைத்தன்மை வாய்ந்த சொல்லாற்றலால் தோன்றுவதே.

இங்ஙனம் அணிக்குறிப்புக்கள் பல அகத்தும் புறத்தும் உள்ளுறைந்து நின்று உணரப்பெறுவனவாகுமிடத்து, அவற்றிற்கு அமைதிகாண்டலும் இன்றியமையாததாகின்றது. இவைகளை உள்ளுறைத் தன்மை உடையனவல்லவென்றோ இவை கொள்ளத் தகுவனவல்ல என்றோ கூறுவதும் இயலாதாம். ஆகவே இத்தகைய அணிக்குறிப்புக்கள் பலவற்றையும் ஓரினமாக்கி அவற்றை உள்ளுறைந்துவருகின்ற குறிப்புக்களாகக் கொள்வதொரு உள்ளுறையாகச் சிறப்பென்ற இவ்வுள்ளுறையைக் கொள்வதே பொருத்தமுடையதாம். ஆனால் உள்ளுறையுவமம் இதனுள் அடங்குவதேயாயினும், தனக்கெனச் சிறப்புடையதொரு நியதிக்கு உட்பட்டு வருகின்ற இயல்பு நோக்கித் தனி உள்ளுறையாகப் பிரித்து நிறுத்தப் பெற்றமையின், அந்நியதிக்கு உட்படாது வருவன பலவும் இதற்கு உரியனவாம்; என்று கொள்வது இன்றியமையாததாகின்றது. சிறப்பென்ற இவ்வுள்ளுறையின் இயல்பு இங்ஙனம் விரிந்த பரப்புடையதாகக் கொள்ளும்போதுதான் இவ்வுள்ளுறையும் பெரும் பயனுடையதாக அமைகின்றது.

ஆகவே, சுவைக்குறிப்புக்கள் அல்லது மெய்ப்பாடுகள் பலவற்றையும் உள்ளுறையாகக் கொண்டியல்கின்ற நகை என்னும் உள்ளுறை, அகம் புறம் இரண்டிற்கும் வேற்றுமையின்றி ஏற்றபெற்றி வருவது போலவே, சிறப்பென்ற இவ்வுள்ளுறையும் அணிக்குறிப்புக்கள் பலவற்றையும் உள்ளுறையாகக் கொண்டியல்வதாகி, அகம் புறம் இரண்டிற்கும் வேற்றுமையின்றி ஏற்றபெற்றி வருவதாகுமென்பதும், உள்ளுறையுவமத்திற்குரிய நியதிக்குட்படாது உவமையும் உவமவேறுபாடும் உள்ளுறைந்தியல்கின்ற பொதுவியல்பு ஒன்றேயுடையது இவ்வுள்ளுறை என்பதும் இவ்வாற்றாற் பெறப்படும்.

இனிச் சுட்டென்பது ஒன்று எஞ்சி நிற்கின்றது. இது உள்ளுறை ஐந்தனுள்ளும் மூன்றாவதாக இடையில் நிற்பதாயினும், நகையும் சிறப்பும் இவ்வியல்புடையனவென்று கண்டபின்னரே இதன்

உண்மை இயல்பு காண்டற்கு இயலுமாதலின், இது இறுதியில் எடுத்துக்கொள்ளப்பெறுகின்றது. இதற்குச் சுட்டென்று பெயரிட்டிருப்பது சுட்டிக்கூறுவதற்குரிய பொருள் ஒன்று உள்ளுறைந்து நிற்பதனாலேயே என்பதை முன் இவ் உள்ளுறை என்ற தலைப்பிற் கண்டிருக்கின்றோம்.

சுட்டிக்கூறுவது சுட்டு எனப்படுகின்றது. சுட்டிக் கூறுதலாவது குறித்துக் கூறுதல். குறித்துக் கூறலாவது கூறக்கருதிய பொருளை உணர்த்தும் வகையிற் கூறுதல். ஆகவே சுட்டிக்கூறுதல் சுட்டுதல் எனவும்படும். சுட்டுதல் என்பது சுட்டும் ஆம். ஆதலின் சுட்டிக்கூறப்பெறுவதாய பொருள் சுட்டு எனப்பெறுவதாகி, அஃதே உள்ளுறைந்து உணரப்பெறுவதாக நிற்கின்றவிடத்துச் சுட்டென்று வழங்கும் இவ்வுள்ளுறையாகவும் அமைகின்றது.

இங்ஙனம் சுட்டிக் கூறுவதற்குரிய பொருள்கள் பலவும் பொருளென்றும் வழங்கப்பெறும். அவற்றை உள்ளுறைக் குறிப்பாகக் கொண்டியல்கின்ற இவ்வுள்ளுறை, அப்பொருளைச்சுட்டி உணரநிற்றலின் சுட்டு என்று வழங்கப் பெறுவதாயிற்று.

உள்ளுறையாக வருகின்ற குறிப்புக்கள் பலவற்றையும் நிறுத்தி இனப்படுத்துமிடத்துச் சுவைக்குறிப்பும் அணிக்குறிப்பும் அல்லாத எல்லாக் குறிப்பும் பொருட்குறிப்பென்று கொள்ளப்பெறுகின்றன. இங்ஙனம் குறிப்புக்களை மூன்றாக இனப்படுத்துவது குறைந்த அளவிற்கொள்ளும் பாகுபாடாகின்றது. இஃதே எவ்வகைக் குறிப்புக்களையும் எஞ்சாது அகப்படுத்தி நிற்பதும் ஆம். ஆகவே சுவை அல்லது மெய்ப்பாடும் அணியும் அல்லாத பொருளை உள்ளுறையாகக் கொண்டியல்வது இவ்வுள்ளுறை என்றதாயிற்று.

ஆயின், இறைச்சியும் அன்புறு தகுவன சுட்டுமென்றலின் இச்சுட்டின் வேறுவதெங்ஙனம்? இறைச்சியின் சிறப்பியல்பு முன்பே மொழியப்பெற்றது. இஃதும் உள்ளுறை உவமத்தைப் போலவே.

ஒரு நியதிப்பட வருவதாதலின் தனிப்படுத்தப் பெற்றது. இது தனி உள்ளுறையாகவும் நிறுத்தப்பெற்றிருக்கின்றது. ஆதலின் இந்நியதிக்குட்பட்டு வருகின்ற அப்பொருட்குறிப்பு நீங்கலாக ஏனைப் பொருட்குறிப்புக்கள் பலவும் இவ்வுள்ளுறைக்குரியனவாகக் கொள்ளுதல் இன்றியமையாததாம்.

இவ்வுள்ளுறையின் விரிவாக அமைவது பொருளியல் என்று அறிந்திருக்கிறோம். அப்பொருளியலுள் வருவன யாவும் அகத்திற்கே உரியனவாகக் காணப்பெறுகின்றன. இத்தகைய பொருளியலை விளக்கத்திற்கு எதிர்நோக்கி நிற்கின்ற சுட்டென்ற இவ்வுள்ளுறை, அகம் புறம் இரண்டிடத்தும் பொதுமையின் இயங்குவது எங்ஙனம்?

இந்நிலையில் நாம் சிறிது சிந்தித்துப் பார்ப்பது இன்றியமையாததாகின்றது. தொல்காப்பியப் பொருளியல் பொருட்குறிப்பெல்லாவற்றையும் எஞ்சாது உணர்த்துதற்கு எழுந்ததா? அல்லது அகத்திற்கு இன்றியமையாதன சிலவற்றை உணர்த்துதற்கு எழுந்ததா? முதலில் இவ்வினவிற்கு விடைகாண்டல் இன்றியமையாததாகின்றது. தொல்காப்பியப்பொருளியல் அகத்திற்கு இன்றியமையாதன சிலவற்றைக் கூற எழுந்ததேயன்றிப் பொருட்குறிப்புக்கள் பலவற்றையும் எஞ்சாது உணர்த்தவேண்டுமென்று எழுந்ததன்று. வரைதல்வேட்கைப் பொருளவாக வருவனவற்றை உணர்த்துதற்கு முன்,

> "செறிவும் நிறைவுஞ் செம்மையுஞ் செப்பும்
> அறிவும் அருமையும் பெண்பா லான"

என்று வருவதும்,

> "நாணும் மடனும் பெண்மைய வாகலின்
> குறிப்பினு மிடத்ினு மல்லது வேட்கை
> நெறிப்பட வாரா அவள்வயி னான"

என்று களவியலில் வருவதும் இக் கருத்தை வற்புறுத்துவனவாம். எனவே, அகத்தின் இன்றியமையாமை குறித்தே சில பொருளியலும் கூறப் பெறுகின்றன. அவைகளே பொருட்குறிப்பாக் தகுதி

யும் உடையனவாக அமைகின்றன. பொருட் குறிப்புக்களை முற்றக் கூறுவதும் இயலாததாம். இக்காரணத்தால் அங்கே வருவன அகத்திற்குரியனவாக அமைகின்றனவேயன்றிப் புறத்திற்கு இத்தன்மை வாய்ந்த குறிப்புக்கள் வரக்கூடாதென்று உணர்த்துதற்காகவல்ல. இக் கருத்துப் புலப்படுதற்காகவே இத்தகைய பொருள்களை உள்ளுறையாக அடக்கி வருகின்ற சுட்டு என்னும் இவ் வுள்ளுறையை நகை சிறப்புக்களோடுசேர நிறுத்தியதும், அகத்திற்கே வரவேண்டுமென்ற சிறப்புரிமை பூண்ட உள்ளுறை உவமங்களை முதலில் நிறுத்தி அவற்றின் தொடர்பும் அற்றுவிடாமல் அகம் புறம் இரண்டிற்கும் உரிய நகை சிறப்புக்களோடும் தொடர்புடையதாக இதனை நிறுத்தி இருப்பதும் இவ் வுண்மையைப் புலப்படுத்தும்.

ஆகவே சுட்டு நகை சிறப்பென்ற இம் மூன்று உள்ளுறைகளும் பொருள் சுவை அணி என்ற அடிப்படையிற் பாகுபடுத்தப் பட்டிருக்கின்றன என்பதும், அகம் புறம் இரண்டிற்கும் வேற்றுமையின்றி ஏற்றபெற்றி வரும் என்பதும் இதனாலுணரப்படும். இறைச்சியும் சுட்டென்று கொள்ளலாமாயினும் அகத்திற்கே வரவேண்டுமென்ற கட்டுப்பாட்டுடன் கருப்பொருளிடமாகத் தோன்றுவதிற் பிறழ்ச்சி இன்றி வருதலுடைமையின் வேறு தனி உள்ளுறையாகக் கொள்ளப் பெற்றிருக்கின்றது.

"துடியடிக் கயந்தலை கலக்கிய சின்னீரைப்
பிடியூட்டிப் பின்னுண்ணுங் களிறெனவு முரைத்தனரே"

என்பதனுள் வருவது இறைச்சியாகலாம். இருக்கும் நீரோ சிறிதளவினதே; அதனையுங் கன்று கலக்கி விட்டது; அதனையுங் கூடப் பிடியே முதலில் உண்ணுமாறு செய்கின்றது அக்களிறு. அதன் அத்தகைய அன்பு நிலையைக் காண்கின்ற அத் தலைவனது அன்பு நிலை நம்மைப் பிரிந்து செல்லவும் அதற்கு இடம் தருமோ? என்றவாறுகப் பிரிவால் வருந்துகின்றபோது அன்புறத் தகுந்த செய்தியாகக் கருப்பொருளிடம் தோன்றி அகத்திற்கே உரியதாக அமைகின்றது. இந் நியதியுடைமை பற்றியே சுட்டின் வேறாக இது தனித்ததொரு உள்ளுறையாக நிறுத்தப் பெற்றது.

இவ்வாறன்றிச் சுட்டிக் கூறுவதொன்றை உள்ளுறையாகக் கொள்கின்ற பொது வியல்பு மட்டும் உள்ளது சுட்டென்று கொள்ளப் பெறும். "பெருங்கடன் முகந்த" என்பதனுட் கொன்னே செய்தியோ அரவம் என்றதனுல், பயனின்றி அலர் விளைத்தியோ எனவுங் கூறி; ஏனற்புறமும் தருதியோ என்றதனுல், வரைந்து கொள்வையோ எனவுங் கூறித் தலைவனை மழைமேல் வைத்துக் கூறலிற் சுட்டாயிற்றென்பர் நச்சினார்க்கினியர். இதனைக் கூர்ந்து காண்போமாஞல் அடுத்து வரும் எடுத்துக் காட்டும் சுட்டாமென்றே தோன்றும்.

"ஈர்ந்தண் ஆடையை எல்லி மாலையை
சோர்ந்துவீழ் கதுப்பினுள் செய்குறி நீவரின்
ஒளிதிகழ் ஞெகிழியர் கவணையர் வில்லர்
களிறெனஎ வயிர்ப்பவ ரேனல்கா வலரே"

'இது காப்பினுன் வழுவுணர்த்தியது' என்பர் நச்சினார்க்கினியர். காவலர் காணின் ஏதம் பெரிதாம் ஆதலின் இத்தகைய ஏதத்திற்கு இடமின்றி வரைந்து கொள்ளல் வேண்டும் என்பது இதனுல் உணர்த்தப் பெறுவதாகும். இத்தகையதொரு பொருட் குறிப்பு உள்ளுறைந்து நிற்ப அதனை உணர்த்தி வருகின்ற உள்ளுறையாக அமைவதாதலின் இஃதுஞ் சுட்டென்ற உள்ளுறை என்று கொள்ளுதற் குரியதேயாம்.

"அன்னுய் வாழிவேண் டன்னை என்னை
தானு மலைந்தா னெமக்குந் தழையாயின
பொன்வீ மணியரும் பினவே
யென்ன மரங்கொ லவர்சார லவ்வே"

'இது தோழி தழை தந்தானென அறத்தொடு நின்றது' என்கின்றனர் நச்சினார்க்கினியர். தழைதந்தா னென்று கூறுவதும் இதனுட் குறிப்பேயாம். அவன் மலைச்சாரலில் உள்ளது என்றும், என்னை தானும் மலைந்தனன் என்றும் கூறி எமக்குக் தழையாயின என்றமையின், அவன் தழைதந்தனன் என்று குறிப்பால் உணரப் பெறுவதாம். இச் செய்தி குறிப்பாலுணர்த்தப் பெறுவதாகவே அவனையே மணம் புரிந்து கொள்ளும் முடிவினள் என்ற செய்தியையும் அறிவித்து

அறத்தொடு நின்றதாயிற்று. ஆகவே அறத்தொடு நிற்குஞ் செய்தி இதனுட் சுட்டப் பெறுவதாக இஃதுஞ் சுட்டென்ற இவ் வுள்ளுறையைச் சேர்ந்ததேயாம். 'செங்களம் பட' என்பதனுள் வரும் இரு வகைக் குறிப்புங்கூடச் சுட்டேயாம்.

இங்ஙனம் அகப்பொருட்குரிய செய்திகள் உள்ளுறைக் குறிப்பாக வருவதுபோலப் புறத்திற்குரிய செய்திகளும் இவ்வாறே உள்ளுறைக் குறிப்பாக அமையலாம்.

"செல்வத்துட் செல்வஞ் செவிச்செல்வ மச்செல்வஞ்
செல்வத்து ளெல்லாம் தலை"

என்றவிடத்துப் பிறசெல்வங்களெல்லாம் நிலையாவாகலானும், துன்ப வினைவினவாகலானும், செவிச் செல்வமே தலையாய செல்வமாகலான் ஏனைச் செல்வங்களை ஒழித்து இதனையே செய்க; என்பது குறிப்பெச்சம் என்பர் பரிமேலழகர். இவ்விதம் ஏனைச் செல்வங்களை ஒழித்து இதனையே செய்க என்றுணர்த்துவதும் பொருட் குறிப்பா யடங்குவதேயாம். ஆதலின் இத்தகைய குறிப்பை உணர்த்தி வருகின்றமையின் இஃதும் இவ் வுள்ளுறையே யாம்.

"மழைக்கணஞ் சேக்கும் மாமலைக் கிழவன்
வழைப்பூங் கண்ணி வாய்வா ளண்டிரன்
குன்றம் பாடின கொல்லோ
களிறுமிக வுடையவிக் கவின்பெறு காடே"

என்பதனால் காட்டில் வாழும் யானைகளைக் காட்டிலும், ஆய் அண்டிரனைப் பாடிய புலவர்கள் பெறும் யானைகள் அதிகமாம் என்று இச் செய்தியைச் சுட்டுவதாகின்றது இச் செய்யுள். இங்ஙனம் யானைக் கொடையாலாய அவனது புகழ் பொருட்குறிப்பாக உள்ளுறைந்து நிற்க, அதனை உணர்த்தி நிற்கின்ற இத்தகைய இலக்கியமும் சுட்டென்ற உள்ளுறையாவது விலக்கப்படாதாம்.

"உலைவிடத் தூறஞ்சா வன்கண் தொலைவிடத்துத்
தொல்படைக் கல்லா லரிது"

மூலப்படை கூலிப்படை முதலாய அறுவகைப் படைகளுள்ளும் சிறப்புடையது மூலப்படை யாதலால் அதனை அரசன் வெல்பொறி முதலியன கொடுத் தளிக்கவேண்டு மென்பது குறிப்பெச்ச மென்று கொள்ளப் படுகின்றது. இங்ஙனம் குறிப்பெச்சம் எனப்படுவதும் பொருட்குறிப்பே. இதனை உணர்த்தி வருகின்றமையுஞ் சுட்டென்ற உள்ளுறையின் இயல்பே. இங்ஙனம் பொருட்குறிப்பை உணர்த்தி வருவன பலவும் இவ் வுள்ளுறைக் குரியனவேயாம்.

எனவே (உள்ளுறைகளை ஐந்தாக வகுத்திருப்பது அகப் பொருளின் இன்றியமையாமை குறித்ததே என்பதும், அவற்றுள் சுட்டு நகை சிறப்பு என்பனவே உள்ளுறைக் குறிப்புக்கள் பலவற்றையும் தம்முள் அடக்கி நிற்பன என்பதும், உள்ளுறை உவமமும் இறைச்சியும் அகத்திணைக்கே வருவதற்குரிய நியதி உடையன வென்பதும், ஏனைய மூன்றும் அத்தகைய நியதி இன்றி ஏற்றபெற்றி வரப்பெறு மென்பதும், இக் காரணம் பற்றியே உடனுறை உவமங்களுக்குப்பின் சுட்டு முதலியன முறையே வைக்கப் பெற்றுள்ளன என்பதும், இம் மூன்று உள்ளுறைகளின் விளக்கமாக அமைவன பொருளியல் முதலிய மூன்று இயல்களும் என்பதும், இவற்றுட் பொருளியலுள் வருவன பல அகத்திற் குரியனவாகவே காணப்படுதற்குக் காரணம் அகத்திற்கு அவை இன்றியமையாது வேண்டப்படுகின்றமையே அன்றிப் புறத்திற்கு அத்தகையன வரக்கூடா என்பதற்கன்று என்பதும், உள்ளுறைக் குறிப்புக்களை நூல்கள் எஞ்சாது முற்ற வுணர்த்துதல் இயலாததாதலின் இன்றியமையாது வேண்டப்படுவனவற்றைக் கொண்டே அவற்றின் பாகுபாடும் இயல்பும் விளங்க அவ் வுள்ளுறைகளும் அவற்றின் விளக்கங்களும் தரப் பெற்றிருக்கின்றன என்பதும் இதனால் நன்கு விளங்கும்.

சகுனத்துள்—நாய்

(பிரகத்சங்கிதையுள் கண்டது)

வித்துவான், திரு. சு. குமாரஸ்வாமி ஆச்சாரிஅவர்கள், M.A. விரிவுரையாளர், தமிழ்க்கல்லூரி, மயிலம்.

நாய் மனிதன், குதிரை, யானை, குடம், சேணம், பாலுள்ள மரம், செங்கற்குவியல், குடை, படுக்கை, ஆசனம், உரல், கொடி, சாமரம், புல்நிறைந்த இடம், மலர்கள் இவைகளின்மேல் சிறுநீர் கழித்து, பிரயாணியின் முன்னே செல்லுமாயின் அவனுக்குச் செயல் கைகூடும். ஈரமான பசுஞ்சாணத்தின் மேலாயின் அவனுக்கு இன்பமான உணவு கிடைக்கும். உலர்ந்த சாணத்தின் மேலாயின் இனிப்புப் பொருள்களும் உலர்ந்த உணவுப் பொருள்களும் கிடைக்கும். முள்ளுள்ளமரம், விஷம் பொருந்தின மரம், விறகு, கல், வாடிய மரம், எலும்பு இவைகளின்மேல் சிறுநீர் கழித்துப் பிரயாணிக்கு முன்னே செல்லுமாயின் அச்சந்தரத் தக்க செயல் நிகழும். உடையாத உபயோகப்படுத்தப் படாத கட்டில், மண் பாண்டம் முதலியவைகளின் மேல் சிறுநீர் கழித்தால் அவற்றிற் குரியவாது வீட்டிலுள்ள கன்னிப் பெண்கள் கேடுறுவர் (கன்னிமை யழியப் பெறுவர்). உபயோகப்படுத்தப்படும் பொருள்களின் மேலாயின் அவற்றிற் குரியவரின் மனைவி கற்பழியப் பெறுவாள். மிதியடிகளின் மேலாயினும் இதே பலன். பசுவின்மேல் நாய் சிறுநீர் கழிக்குமாயின் அவற்றிற் குரியவனுக்கு மனைவி இழிந்தவர்களோடு கட்புக் கொள்வாள்.

நாய் தனது வாயில் மிதியடியோடு, வழிச்செல்வோனுக்கு எதிரில் வருமாயின் அவனுக்கு வெற்றி. இறைச்சியோடு வருமாயின் பொருள் சேரும். ஈர எலும்போடு வருமாயின் மகிழ்ச்சி. கொள்ளிக்கட்டையோடு வருமாயினும் உலர்ந்த எலும்போடு வருமாயினும் அவனுக்கு

மாணம், வாயில் கொம்போடு வருமாயின் அவன் அடிபடுவான். மணி தனது கை கால் முதலிய உறுப்புக்களோடு வருமாயின் அவனுக்கு நிலம் சேரும். ஆடை, மாப்பட்டைகளோடு வருமாயின் துன்ப முண்டாம். சிலர் கொள்கையின்படி ஆடையோடு வருமாயின் நற்பலன் உண்டாம்.

நாய் தனது வாயில் உலர்ந்த எலும்போடு ஒரு வீட்டில் நுழைந்தால் அவ்வீட்டுத் தலைவன் மரணமாவான். சங்கிலி, கொடி, முள் முதலியவைகளோடு வழிச் செல்வோனுக்கு எதிரில் வருமாயின், அவனுக்குச் சிறை யுண்டு. அவனது பாதத்தை நாய் நக்கினாலும், காதை ஆட்டிக்கொண்டு அவன் மீது ஏறுமாயினும் அவனுக்கு இடையூறுண்டாம். அது அவனைத் தடுத்தாலும், தனது காலையே நக்கிக்கொண்டாலும் அவனுக்குத் தடையுண்டாம்.

நாய்கள் சூரியோதயத்தில் ஊரின் இடையே சூரியனை நோக்கிக் குரைக்குமாயின் அந் நாட்டு மன்னன் மாறுவான். தென்கிழக்கிலிருந்து சூரியனை நோக்கிக் குரைக்குமாயின் கள்ளராலும் நெருப்பாலும் அச்ச முண்டாம். நண்பகலிலாயின் நெருப்பினால் தீங்கும் மாணமு முண்டாம். பிற்பகலி லாயின் குரூரமான சண்டை நிகழும்; இரத்தம் வடியும் நிலை ஏற்படும். சூரியன் மறையும் போது சூரியனை நோக்கிக் குரைக்குமாயின் உழவர்களுக்குத் துன்பமுண்டாம் மாலையில் வடமேற்குத் திசையை நோக்கிக் குரைக்குமாயின் காற்றாலும் கள்ளராலும் தீங்குண்டாம். வடதிசை நோக்கி நள்ளிரவில் குரைக்குமாயின் பிராமணர்களுக்குத் துன்பம்; ஆடுமாடுகள் களவாடப்படும். விடியற்காலையில் வடகிழக்கு நோக்கிக் குரைக்குமாயின் கன்னிப் பெண்களைப் பற்றி அலர் எழும், நெருப்பினால் தீங்குண்டாம், கருச்சிதைவுண்டாம்.

மழைக் காலத்தில் நாய் வைக்கோற் போர், வீடுகள், கோயில்கள் மீதிருந்து ஊளையிட்டுக் குரைக்குமாயின் அதிக மழை யுண்டு. மற்றைய

பருவங்களிலாயின் நெருப்பு நோய் இவற்றால் துன்பமும் மரணமு முண்டாம். மழைக் காலத்து நீரில்லாதிருக்கும் காலத்தில் நாய் நீரில் முழுகிப் பின்னர் சுற்றிச் சுற்றித் தன் உடம்பிலுள்ள நீரை உதறு மாயினும், நீர் பருகுமாயினும் பன்னிரண்டு நாட்களுக்குள் மழை.

வீட்டு முற்றத்தில் தன் உடல் வெளிப்புற மிருக்க அவ் வீட்டுக் குரியவனை நோக்கி நாய் குரைக்குமாயின் வீட்டில் நோய் பரவும். வீட் டின் உட்புறத்தில்நின்று வெளியிலிருக்கும் அவனைநோக்கிக் குரைக்கு மாயின் அவன் விபசாரி யாவாள். வீட்டின் சுவரைக் காலால் பிறாண்டுமாயின் கள்ளரால் அச்சம். மாட்டுக்கொட்டகையில் தரையைப் பிறாண்டுமாயின் மாடு களவாடப்படும். வயலிலோ அல்லது களஞ்சியத் திலோ அவ்வாறு செய்யின் தானியம் சேரும். நாய் ஒரு கண்ணில் நீர் வடிய, சிறிது உணவைத்தின்று பரிதாபமாகக் காணப்படுமாயின் அவ் வீட்டில் துன்பமுண்டாம். நாய் பசுக்களோடு பூசலிடுமாயின் (விளை யாடு மாயின்) தானியம் மிகும், மகிழ்ச்சி யுண்டாம், உடல் நலனு முண்டாம்.

ஒரு பிரயாணியின் இடது முழங்காலை நாய் மோப்பம் பிடிக்கின், அவனுக்குப் பொருள் கிடைக்கும். வலது முழங்காலாயின் பெண் களோடு சண்டை யுண்டாம். இடது தொடையிலாயின் புணர்ச்சி யின்பம். வலது தொடையிலாயின் ஆர்வலர்களோடு உடன்பாடில்லாமை யுண்டாம். பாதங்களை முகரின் பிரயாணம் கூடாது. நின்று கொண் டிருப்பவர்களை நாய் முகரின் எண்ணியபடி தனம் கிடைக்கும். ஒரு வனது பிதியடியை அவனிருக்கு மிடத்தே நாய் முகரின் பிரயாணம் உண்டாம். ஒருவனது இரண்டு கைகளையும் முகரின் பகைவர் திருடர் களோடு கூட்டம் உண்டு. நாய் இறைச்சி, எலும்பு, தின்பண்டங்களைச் சாம்பலில் மறைத்து வைக்குமாயின் விரைவில் நெருப்பினால் தீங்குண் டாம். நாய்கள் ஊரில் குரைத்துவிட்டுப் பிறகு மயானத்துக்குச் சென்று ஆங்கேயும் குரைக்குமாயின் அவ் வூரில் முக்கியமானவர்கள் மரணமாவர். பிரயாணத்துக்குத் தயாராக இருக்கிற ஒருவனை நோக் கிக் குரைக்குமாயின் பிரயாணமே கூடாது.

நாய் பிரயாணியின் இடது பக்கத்திருந்து "ஊ" அல்லது "ஓ" என்று கத்துமாயின் அவனுக்கு எண்ணியது கிடைக்கும். "ஆவ்" என்று கத்துமாயின் துன்பமுண்டாம். அவனுக்குப் பின்னிருந்து எப்படிக் கத்துமாயினும் பிரயாணம் கூடாது. நாய் அடிக்கடி உரத்து "கம்கம்" (Kham Kham) என்று அவை அடிபட்டது போலக் கத்துமாயினும் பிரயாணியை நோக்கி வட்டமிட்டுச் செல்லுமாயினும் பிரயாணத்தாற் பயனில்லை, மரணபய முண்டாம். பல்லைக் காட்டிக்கொண்டு தன் வாயின் ஓரங்களை நக்கிக் கொண்டிருக்குமாயின் பிரயாணம் செய்வோனுக்கு நல்லுணவு கிடைக்கும். ஓரங்களை யன்றி நக்கிக்கொண்டிருக்குமாயின் அவன் உண்ணத் தொடங்கினும் உண்ண முடியாதபடி இடையூறுண்டாம். ஊரின் இடையில் நாய்கள் கும்பல் கும்பலாக மாறி மாறிக் குரைத்துக் கொண்டே யிருக்குமாயின் அவ்வூர்த் தலைவன் துன்ப முறுவான்.

ஒரு மாத்தினருகில் நின்று குரைக்குமாயின், மழையுண்டாம். இந்திரகீலத்தினருகிலாயின் மந்திரிக்குத் துன்பம். ஒரு வீட்டின் வடமேற்கு மூலையிலிருந்து குரைக்கு மாயின் பயிர்க்குத் தீங்கு. நகர வாயிலி லாயின் நகரத்துக்குத் தீங்குண்டாம். படுக்கையிலிருந்து குரைக்குமாயின் அதனை யுடையவர்க்கு அழிவு. பிரயாணியின் பின்னிருந்து கத்துமாயின் தீங்குண்டு. பிரயாணியின் இடதுபுறத்திலிருந்து கத்துமாயின் பகைவர்களால் தீங்குண்டு.

துறைமங்கலம் சிவப்பிரகாச அடிகள்

வித்துவான், ஆ. சிவலிங்கனார் அவர்கள், விரிவுரையாளர்,
தமிழ்க் கல்லூரி, மயிலம்.

(352-ம் பக்கத் தொடர்ச்சி)

அதன்பின்பு தாங்கொண்ட கருத்தை நிறைவேற்ற விரும்பி தக்ஷிணதேசத்திற்குச் செல்லவேண்டும் என்பதை அவ்வண்ணாமலை ரெட்டியாருக்கு அறிவுறுத்தித் திருநெல்வேலியையடைந்து, தாமிர பருணிநதி தீரத்திலிருக்கிற சிந்துபூந்துறையில் தருமபுர ஆதீனத்து வெள்ளியம்பலவாணசுவாமிகள் இலக்கணஇலக்கியங்களில் அதிவல்லவர்களாய் இருக்கின்றார்கள் என்பதைக் கேள்வியுற்று, அவ்விடத்திற் சென்று சுவாமிகளைக்கண்டு, நாம் இலக்கணம் கற்கவேண்டிவந்தமையைத் தெரிவித்துக்கொண்டனர். அச்சுவாமிகள், சுவாமிகளுடைய இலக்கியப் பயிற்சியை அறிதற்பொருட்டு "'கு' என்பதை முதற் கொண்டு 'ஊருடையான்' என்பதை இடைப்பெய்து 'கு' என்பதையே ஈற்றினும்கொண்டு முடியும்படி ஒரு வெண்பாப் பாடுக" என்றுகூற, சுவாமிகள்,

> குடக்கோடு வானெயிறு கொண்டாற்குக் கேழல்
> முடக்கோடு முன்னமணி வாற்கு—வடக்கோடு
> தேருடையான் தெவ்வுக்குத் தில்லைதோல் மேற்கொள்ளல்
> ஊருடையான் என்னும் உலகு

என்னும் வெண்பாவைத் திருவாய்மலர்ந் தருளினார். மேலைவெண்பாவினுள் வடக்கோடு தேருடையான் என்று அமைத்தமையை அச்சுவாமிகள் வியந்து பாராட்டி, சுவாமிகளைத்தழுவித் தம் மருகிருத்திச் சுவாமிகள் சகோதரர்களாகிய வேலைய சுவாமிகள், கருணைப்பிரகாச சுவாமிகள் என்னும் இருவருக்கும் ஒரு பக்ஷத்துள் பஞ்சலக்ஷணங்களையும் பாடம் சொல்லி முடித்தார். அதுகண்ட சிவப்பிரகாச சுவாமிகள்

பெருவகையுற்ற அண்ணாமலைரெட்டியார் என்பவர் தங்களுக்கு வழிச் செலவிற் குபகரித்த மூன்னூறு பொன்னையும் குருதக்ஷிணையாக வைத்து உபசரிக்க, அச்சுவாமிகள், "இது நமக்கு வேண்டுவதில்லை; தாஷித்த லையே இயல்பாகக்கொண்டு திருச்செந்தூரில் வசிக்கும் தமிழ்ப்புலவர் ஒருவரைத் தங்கள் முன்னிலையில் வெற்றிகொண்டு அவர் வந்து நம்மை வணங்கும்படி செய்தலே குருதக்ஷிணையாகும்" என்று மறுத்தருளினார்.

அக்கருத் தறிந்த சுவாமிகள் அதற்குடன்பட்டு அவர் மாணாக்க ரோடும் திருச்செந்தூருக்குப் போய் முருகக்கடவுளைத் தரிசனஞ்செய்து பிரதக்ஷிணம் வரும்போது, அச் சுவாமிகளாற் சுட்டப்பட்ட தமிழ்ப் புலவர் எதிர்ப்பட்டுச் சிவப்பிரகாச சுவாமிகளை யாவரென்று அவருடன் வந்த மாணாக்கரிடத்திற்றானே வினவி, மேற்படி சுவாமிகளிடத்தில் பாடங்கேட்ட சுவாமிகள் என்பதையறிந்துகொண்டு அவர்களைத் தமது வழக்கப்படியே தூஷிக்கத் தலைப்பட்டார். அப்பொழுது சுவாமிகளுக் கும் புலவருக்கும் கலகம் நேரிடப் புலவர், சுவாமிகளை 'நூதனவகையாற் பாடி வெற்றி பெறுவோம்' எனத் துணிந்து, "நாமிருவரும் நிரோட்டக யமகம் பாடுவோம், முன்னர்ப்பாடி முடித்தவர்க்கு அஃதியலாதார் அடிமையாவோம்" என்று வாக்குத்தத்தம் செய்தார். சுவாமிகள், தங் கருத்து நிறைவேறுதற்கு வாயில் இதுவே யென்று கருதி அதற் கிசைந்தருளி அவரோடு பாடத்தொடங்கி, உடனே அத்தலத்து முருகக்கடவுள்மீது நிரோட்டக யமக அந்தாதித் தொடையாக முப்பது கட்டளைக் கலித்துறை பாடி முடித்தருளினர். அதுகண்ட புலவர், தாம் ஒரு செய்யுளேனும் பாடி முடியாமையை யுணர்ந்து சுவாமிகளு டைய திருவடிகளை வணங்கி "அடிமையாயினேன்" என்று விண்ணப் பஞ் செய்ய, சுவாமிகள், தமது அடிமையாய் அமைந்த அப்புலவரை ஆதீனத்திற் கழைத்துவந்து அச் சுவாமிகளுக்கு அடிமையாக்கிவிட் டார். அச் சுவாமிகள் திருவுள மகிழ்ந்து சிவப்பிரகாச சுவாமிகளைப் பார்த்து "தாங்கள் பாடிய செய்யுளில் சிவபிரானுக்குரிய தலம் சிதம் பரமேயெனச் சுட்டிக் குறிப்பால் விளக்கினமையால் அத்தலத்திலே சிலகாலம் வாசம் செய்தருளுக" என்று விடைகொடுத்தனுப்பியருளினர்,

சுவாமிகள் அவ்விடத்தினின்றும் நீங்கி, சிவஸ்தலங்கள்தோறும் சென்று சுவாமிதரிசனம் செய்து, துறைமங்கலத்தைச் சார்ந்து முன்போலவே அண்ணாமலைரெட்டியார் என்பவருக்குத் திருவருள் பாலித்து அவரது வேண்டுகோளின்படி அவராளுகையிலமைந்த வாலிகண்டபுரத்தின் வடமேற்பாகத்துள்ள திருவெங்கைமா நகரத்திலே தம் பொருட்டு அவரால் கட்டப்பட்ட திருமடத்தில் வீற்றிருந்துகொண்டு அத் தலத்திலுள்ள பழமலைநாதர் மீது திருவெங்கைக் கோவை, திருவெங்கைக் கலம்பகம், திருவெங்கையுலா, திருவெங்கையலங்காரம் என்னும் பிரபந்தங்களை யியற்றியருளினார். அக் காலத்தில் ஒரு நாள் அவ்வூர்ப் பிடாரியார் உற்சவ இரதத்தால் அடியார்க்கு உபயோகமாகத் திருமடத்தெதிரிலிருந்த முருங்கைமரம் அழிந்தமை கண்டு,

திருந்துதமிழ் இலக்கணவைவர் இணைக்கோவை
    விருத்தகிரிச் செல்வற் கோதும்
பெருந்தகைமை யுடையம்யாம் விடுமோலை
    வெங்கைநகர்ப் பிடாரி காண்க
விரும்புவியி லொருமுருங்கைக் கொம்பொடியா
    மற்காத்திங் கிருக்கு நீரம்
முருங்கைதனை வேரோடுங் களைந்தனையென்
    றுனக்கு முறைய தாமோ

என்னும் திருவிருத்தத்தை யருளிய மாத்திரத்தே, அவ்விரதம் அழிந்தொழியத் தாம் சில காலம் அங்கிருந்து துறைமங்கலத்தை யடைந்தருளினார்.

[தொடரும்]

அநுதாபக் குறிப்பு

கடந்த 26—9—54 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2-30 மணிக்கு, கவிமணி ஸ்ரீ தேசிக விநாயகம் பிள்ளையவர்கள் இவ்வுலக வாழ்வு நீத்து இறைவன் திருவடிநீழ லெய்தின செய்தி, தமிழக மனத்தையும் தனிப் பெருந் துயரில் ஆழ்த்தியுளது. அதனால் செந்தமிழணங்கும் நொந்து வருந்து மெனல் மிகையாகாதன்றோ?

காலஞ்சென்ற பிள்ளையவர்கள் மறுமலர்ச்சிக் கவிகள் வரிசையில் முதன்மை வாய்ந்தவர். தாய்நாட் டன்பும், தமிழ்மொழிப் பற்றும் தகவுமிக வுடையவர்; பழுத்த சீர்திருத்த வாதி; சிறந்த அரசியல் அறிஞர்; உயர்ந்த ஆன்மஞானி; ஒப்புயர் வற்ற சரிதலாசிரியர்; தலைமை சான்ற கலையுணர்புலவர்; தளர்ந்த முதுமையிலும் அவர் தம் நாவன்மை தளராமல், தமிழ்மக்களுக்குச் செயற்கரியவற்றைச் செய்து முடித்தனர். இத்தகைய பெரியாரைப் பிரிந்த இவ்வுலகம் ஆற்றுமை மீதூர்தல் அதிசயமின்றே?

அவர் அமரகவி ஆயினர்; அவர் ஆன்மா சாந்தியடைக. அவருக்கு உற்றார்-உறவினரான புத்தேரி திரு, K. குமாரசுவாமி அவர்கள் உள்ளிட்டோரும், பிறரும் ஆற்றுமை கண்டு, தமது ஆற்றுமை தணிவாராக,

வெண்பா

தேசிகவி நாயகமே! செய்ய கவிமணியே!
நீசெய் வினைமுடித்தாய் நீணிலத்தில்—பேசுபுகழ்
வானேறச் செல்வான் வலித்தாய் பிரிவாற்றேம்
தேனூறு சொல்லால் தெளி.

தமிழ்ச் சௌந்தரியலகரி ஆராய்ச்சி

திரு. பண்டித-இராமசுப்பிரமணிய நாவலரவர்கள்,
செந்தமிழ் நிலையம், தக்கலை.

(336-ம் பக்கத் தொடர்ச்சி)

31-வது பாட்டில் 'என்று செப்புநான் மறைகளுமையே' என்பது ஆசிரியர் சேர்த்தது. இப்பாட்டிற் கூறப்படும் மந்திரம்—

(1) க ஏ ஈ ல ஹ்ரீம், (2) ஹ ஸ க ஹ ல ஹ்ரீம், (3) ஸ க ல ஹ்ரீம்.

இவற்றை முறையே அக்கினி, சூரியன், சந்திரன், இச்சைஞானம், கிரியை, சாத்துவிகம், இராசதம், தாமதம் என்பவற்றின் அமைதியாகக்கொள்க. விரிவைச் 'சீசக்கிரமகிமை'யிற் காண்க.

32-வது பாட்டிற் கூறப்படு மந்திரங்கள் ஐம், ஹ்ரீம், ஸ்ரீம் என்பன. இவை முறையே காமராசபீசமும், புவனேசுவரிபீசமும், இலக்குமி பீசமுமாம்.

33-வது பாட்டில் 'பகவதி' என்னும் அழைப்பை நீக்கி 'அழிவற்ற ஞானமுதலே' என்பது சேர்க்கப்பட்டுள்ளது.

'இருசுடர் முலைத்துணைச் சிவன்வடிவு நீ' என்பது 'சரீரம் த்வம் சம்போ:' என்பது முதலாகவரும் தொடர்க்குப் பொருத்தமாயுள்ளது. 'சந்திர சூரிய ரென்னும் இரண்டு சுடராகிய இரண்டு முலையையுடைய நீ சிவன்வடிவுதானே' என்று பொருள் கூறப்பட்டது. மேற்காட்டிய வடமொழித் தொடர்க்கு இப்பொருளுஞ் சிலர் கூறியுள்ளனர். இதிற் கூறப்படும் நவவியூகத்தை உரையாசிரியர் முதற்பாட்டுரையிற் கூறியுள்ளனர். நவவியூகக் குறிப்புக்களைச் 'சீசக்கிரமகிமை'யிற் காண்க.

34-வது பாட்டில், வடமொழிப்பாட்டின் இறுதிக்கருத்து வினு வடிவில் அமைக்கப்பட்டது. இம்முறை பிறசில பாடல்களிலுங் காணப்படுகின்றது. இதில் மனம் முதலாகக் கூறப்படுவன ஆதாரங் களில் அமைந்த தத்துவங்களையாதலால், இது தேவியை ஆதார வடி வினளாகவும் பரிபூரண வடிவினளாகவுங் கூறியதாம் என்க. ஆதார தத்துவங்களை 'ஆதாரமாலை' யிற் காண்க.

இப்பாட்டில் 'உமையே' என்ற விளி ஆசிரியர் சேர்த்தது.

35-வது பாட்டில் 'தபந சசி கோடித்யுதி தரம்' என்பது 'அருக் கன்மதி யனையவடிவு' எனப்பெயர்க்கப்பட்டது. 'கோடித்யுதி' என்பது விடப்பட்டுள்ளது. இதிலும் இறுதிக்கருத்து வினுவடிவிற்று. கருத் துச் சிறிது பிறழ்ந்து அமைந்துள்ளது.

37-வது பாட்டில் ஹம்ஸ: (அன்னம்) என்பதை 'அன்னத்தின் வடமொழிப்பெயர்' என்கின்றார் ஆசிரியர். 'அன்னம்' என்பதை ஆசிரியர் தமிழ்ச்சொல் என்று கருதினதாகத் தோன்றுகிறது.

'ஸமுந்மீல ஸம்வித் கமலம்' என்பது 'முதுஞான முளரி' என்று பெயர்க்கப்பட்டுள்ளது. 'முது' என்பது 'நன்குவிரிந்த' என்னும் பொருளில் வழங்கப்பட்டதாகக் கொள்ளவேண்டும். வடமொழிகளைத் தொகுத்துத் தமிழில் சுருங்கிய சொற்களில் அமைக்கும் இவ் வியல்பை இவ்வாசிரியரிடத்துக் காணலாம். இதில், 'முன்னை, பன்னப்பொதிந்த, மன்னப்படுஞ்சிறை, கமலையே' என்பன ஆசிரியர் சேர்த்தவை.

38-வது பாட்டில் கருத்தொழுக்குச்சிறிது மாறுபட்டுள்ளது. 'அருள் பழுத்த கொம்பே' என்பது சேர்ப்பு. அடைமொழிகள் சில மிகுதியாக அமைக்கப்பட்டுள்ளன.

39-வது பாட்டில் சில கருத்துக்களை ஆசிரியர் தம் கருத்துக்க ளொடு விரித்துரைக்கின்றனர்.

40-வது பாட்டின் இறுதிக்கருத்து விஞவடிவில் அமைந்துள்ளது. 'ஞானவொளியே' என்பது சேர்ப்பு. இவ்விளிப் பெயர் இப் பாட்டிற்கு மிகப் பொருத்தமானதாகக் காணப்படுகின்றது.

பொருட்செறிவுந் திட்பநுட்பமும் வாய்ந்த ஆனந்தலகரிச் செய்யுட்களை மொழிபெயர்ப்பது எளியதொரு செய்கையன்று. பிறமொழிகளிற் பெயர்ப்பதாயின், தமிழ் ஆனந்தலகரியின் சிறப்பு அமையுமோ என்று ஐயங்கொள்ளவே இடமுண்டு. பண்டிதருடைய புலமையும் வடமொழிக் கருத்துக்களைப் பெயர்ப்பதற்குப் பிறமொழிகளைவிடத் தமிழ் சிறந்து நிற்பதும் இவ்வாறு கூறுவதற்குக் காரணமாமென்க.

சௌந்தரியலகரி தேவியின் உறுப்புக்களை அணிந்துரைப்பதாகையால், செய்யுட்கு இசையுஞ் சொற்கள் பல மொழிபெயர்ப்பின்கட் புகுவது வியப்பன்று.

சௌந்தரியலகரி 48-வது பாட்டு வடமொழிப் பாட்டினும் மிக நயம் பெற்று அமைந்துள்ளது. 50-வது பாட்டு ஈற்றடி ஆசிரியர் சேர்ப்பாயினும், கருத்துக் கேற்ற நயந் தருகின்றது. 54-வது பாட்டு வடமொழிக் கருத்தை விளக்கிக் கூறு முறையில் அமைந்துள்ளது. 60-வது பாட்டில், வடமொழிப்பாட்டில் கூறியவாறு நாசியை மூங்கிற் றண்டு (வம்ச தண்டம்) என்னுமல் தமிழ்மரபுக் கேற்பக் குமிழ் என்றதும், தமிழ் நூலுக்கு நயந்தருவதே. 70,வது பாட்டில், கருத்துச் சிறிது மாறுபட்டுள்ளது. இலக்குமியின் பாதத்துத் தோய்ந்த அலத்தகக் குழம்பு புரண்டால், செந்தாமரை மலர் உன் (தேவியின்) பாதங்களை ஒரு வேளை (ஒப்பாகும்) என்பது மூலத்தின் கருத்து. தமிழில் இக் கருத்து மாறுபட்டிருப்பதனுல், அக் கருத்துக் கேற்றதொரு பாடம் இருக்க வேண்டும் என்று தோன்றுகின்றது. கருத்து மிக நயந்தருவதாக வுள்ளது. 76-வது பாட்டும் மூலத்தின் கருத்துக்குச்

சிறிது வேறுபட்ட கருத்தை உடையதாகும். 82-வது பாட்டில் இவை வான வேறு சில கருத்துக்களைப் புகுத்தி யிருக்கின்றனர். 83, 84, 89 என்பன வற்றிலும் அவ்வாறே. 91, 100, 102 என்றுள்ள பாடல்கள் கிடைத்த மூலப் பகுதிகளிற் காணப்படவில்லை. 99-வது பாடல் ஆனந்த லகரி மூலத்திற் காணப்படுகின்றது.

திராவிடசிசு தேவியின் ஞானப்பாலைப்பருகிப் பெருங்கவிஞனான வரலாறு முற்கூறப்பட்டது. மூலத்தில் கூறப்பட்ட திராவிடசிசுவைக் கவிராசர் திருஞானசம்பந்தர் என்றேகொண்டு, அதற்கேற்ப மொழி பெயர்த்தார். ஞானப்பால் பருகினமையும் திராவிடசிசு வென்னும் பெயரும் திருஞானசம்பந்தர்க்கும் பொருத்தமானவையே. ஆயினும், திராவிடசிசு திராவிடகுலத்திற் பிறந்ததாகக் கூறப்படுவது திருஞான சம்பந்தர்க்குப் பொருந்தாது. ஆராய்ச்சியாளர்கள் சங்கரர்காலம் 11-வது நூற்றாண்டு என்றும், திருஞானசம்பந்தர்காலம் 12-வது நூற்றாண்டு என்றுங் கூறுவர். சௌந்தரியலகரி சங்கரர் செய்ததாயிருப்பின், திராவிடசிசு திருஞானசம்பந்தர் என்பது பொருந்தாது. ஆனந்தலகரி திராவிடசிசு செய்தது என்னுங் கூற்றும் இக்கூற்றை வலியுறுத்தும். மூலத்தில் திருஞானசம்பந்தர் என்று விளக்கக்கூறாமல் திராவிடசிசு எனக்கூறுவதும் ஆராயத்தக்கது. 'கவீநாம் ப்ரௌடாநாம்' என்னுங் கூற்று, திருஞானசம்பந்தர்க்குப் பொருந்துவதில்லை. திராவிடசிசுவின் வரலாற்றைக் கவிராசராச வரோதயரான பிரமதிராயர் அறிந்திலர் என்பதும் பொருத்தமன்று. எனவே, ஆசிரியர் திருஞானசம்பந்தரையே திராவிட சிசுவாகக்கொண்டது அவர் மதமாகவே யிருக்கவேண்டும்.